
திருவாசகம் - 44

# எண்ணப்பதிகம் கதைவழியில்



கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# எண்ணப்பதிகம் கதை வடிவில்

## அறிவித்து அன்புறுதல்

## திருப்பெருந்துறையில் அருளியது

**பாருரு வாய பிறப்பறவேண்டும் பத்திமை யும்பெற வேண்டும் சீருரு**

**வாய் சிவபெரு மானே செங் கமல மலர்போல் ஆருரு**

**வாயஎன்னாரமுதே உன் அடியவர் தொகை நடுவேருருவாய நின்**

**திருவருள் காட்டி என்னையும் உய்யக்கொண்டருளே. 01**

"நீ மனம் மாறியது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. சிவனை உனது தந்தை நம்பியதால் பெரும் பயனடைந்தார். அது கற்ற உனக்கல்ல, கற்ற பலருக்குத் தெரிவதில்லை. உள்ளங்கை நெல்லிக்கனி என்பதன் அர்த்தம் புரியுமா உனக்கு. கற்ற உனக்கு அதை நினைவுபடுத்துகிறேன். உனது தந்தை சிவனை வணங்கிப் பெரும் பயன் அடைந்ததை அருகில் இருந்து பார்த்தும் அறிவில்லாமல் நடந்து கொண்டால் அது யாரின் தவறு என்று யோசிக்காது உனது மனமாற்றத்திற்கு நான் சிவனுக்கு நன்றி கூறுகிறேன். அத்துடன் இனி நீ அகல்யாவின் கதையை என்னுடன் கதைக்கக்கூடாது. நீ ஒருபக்கம், அகல்யா ஒருபக்கம், அம்மா ஒரு பக்கம், மாமா ஒருபக்கம் என என்னைச் சூழ்ந்து நின்று பல்வேறுபட்ட துன்பங்களைத் தருகின்றனர். பிறந்ததிலிருந்து நான் துன்பத்தைத் தவிர வேறு எவற்றையும் அனுபவித்தது இல்லை. இளமைக் காலத்தில் வறுமை துன்பம் தந்தது. இப்போ காமம் துன்பத்தைத் தருகின்றது. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல "உலகில் பிறப்பு எடுப்பது இனிமேல் வேண்டாம். பக்தி பெருக வேண்டும். அரிய அமிர்தமே உனது அடியார் கூட்டத்தில் என்னை இணைத்துவிடு. அதன்மூலம் எனக்கு உய்யும் வழியை அருள்" என்கிறார். வாழ்க்கை வெறுத்துவிட்டது. ஒரு பெண்ணை விரும்பினேன். அவள் விரும்பவில்லை. என்னை அவமதித்தாள். இன்னொருத்தி என்னை அளவுக்கதிகமாக அவமதித்தாள். இப்போ காதலிக்கிறாளாம். மாமனின் மகள் வெளியிடங்களில் என்னைக் கண்டால் காறி உமிழ்வாள். அவளது தாய் அவ்விடத்தைவிட்டு அவளைக் கூட்டிச் சென்று விடுவாள்; கோவிலுக்கு வந்து சுவாமி கும்பிட முடியவில்லை. தரித்திரங்கள் கூடவே வந்திருக்கென்பாள்" அதனால் தான் நான் கோவிலுக்குக்கூடச் செல்ல முடிவதில்லை. அப்படி நடந்தவர்கள் எனது

உயர்வைக்கண்டு மோகிப்பது வியப்பைத் தருகிறது. இவர்கள் என்னை விரும்புகிறார்களா? இல்லை எனது பதவியை விரும்புகிறார்களா? என்னை விரும்பாத வாழ்வு எனக்கு வேண்டாம். மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோல நான் சிவனோடு வாழ்ந்து விட்டு அவனோடு சேர்ந்து விடுகிறேன். காதல் என்பது பொய் என்று உனக்கு நான் சொல்லத் தேவையில்லை. காதல் கொண்டது உண்மையானால் காதல் கொண்டவளுக்காக எதையும் செய்யச் சித்தமாக இருத்தல் வேண்டும். இருவரும் பரம எதிரிகள் போல வாழும்போது எம்போன்றோர் அதை நம்பி எவ்வாறு திருமணம் செய்வது?'' என்று கேட்டான் நடராசா.

**உரியேன் அல்லன் உனக் கடிமை உன்னைப் பிரித்திங்**

**கொருபொழுதும் தரியேன் நாயேன் இன்னதென்று அறியேன்**

**சங்கரா கருணையினாற் பெரியோன் ஒருவன் கண்டுகொள்**

**என்றுன் பெய்கழல் அடிகாட்டிப் பிரியேன் என்றென்றருளிய**

**அருளும் பொய்யோ எங்கள் பெருமானே. 02**

''வாகீசா, வாழ்க்கை என்பது மிக மிகத் துன்பமானது. உனது தந்தை வாழ்க்கையில் பெரும் துன்பப்பட்டவர். அவர் உனது தாயாரை விரும்பித் தானே திருமணம் செய்தவர். ஆரம்பத்தில் பிள்ளை இல்லை என்பதற்காகக் காதலித்துத் திருமணம் செய்த பெண்ணை வெறுக்கலாமா…? உனது தந்தையின் பெற்றோர் அவருக்கு இன்னொரு திருமணம் செய்து வைக்க முயன்று உனது தாயாரைக் கொடுமைப்படுத்தினர். இவையெல்லாம் நீ சொல்லித்தான் எனக்குத் தெரியும். வாழும்போது பல நாட்கள் பிரிந்து தனித்தனியே வாழ்ந்தவர்கள். காசு பணம் இருந்தாலும் அவர்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை. அந்தக் காசும் பணமும் தான் உனது தந்தைக்கும் அவரது பெற்றோருக்கும் எதிரியாக இருந்தது. பிள்ளைகள் இல்லாவிட்டால் அந்தப் பெரும்சொத்து யாருக்காவது சென்றுவிடும் என்று கவலைப்பட்டு உனது தாயாரைக் கொடுமைப்படுத்தினர். அப்போ குறை உனது தந்தையிலும் இருக்கலாமென்று யாரும் எண்ணவில்லை. உனது தாயார் ஏழைக்குடும்பத்தில் பிறந்தமையால் துன்புறுத்துவது இலகுவாக இருந்தது. உனது தாயின் பெற்றோர் சிவன் கோவிலில் தவம் இருந்தனர். இதெல்லாம் தெரிந்த நீ இப்போ அவற்றையெல்லாம் மறந்து உனது மனைவியைத் துன்புறத்துகிறாய். இது தான் வாழ்க்கை. திருமணம் செய்யுமுன் நாமகளின் அழகையும், குணத்தையும் பெரிதாக வர்ணித்த நீ திருமணமாகிச் சில மாதங்களுக்குள் அவளுடன் முரண்படத் தொடங்கிவிட்டாய்.

அதுபோலத்தான் ஊரில் பல குடும்பங்கள் வாழ்கின்றன. பெரும்பாலான குடும்பங்களில் மிகப்பெரும் பிரசசினைகள் உண்டு. அதை மறைத்துப் போலியாக வாழ்கிறார்கள். இதை உணர்ந்த மாணிக்கவாசக சுவாமிகள்; ‘‘இறைவா, இன்னும் உனக்குரியவனாக இல்லை. ஆயினும் உன்னைப் பிரிந்திருக்க என்னால் முடியாது. இதற்கு என்ன காரணம் என்றும் எனக்குத் தெரியவில்லை. கருணையோடு எழுந்தருளிய பெரிய பொருள் நீ. என்னை விட்டுப் பிரிவதில்லை என்று சொன்ன சொல்லைப் பொய்யாக்கி விடாதே’’ என்கிறார். இதுதான் எனது நிலையும். கதிரேசன் தாத்தா நல்லவர். அவரது பிள்ளைகள் மிக மிக நல்லவர்கள். அன்பானவர்கள். தொழில் நிமித்தம் வெவ்வேறு இடங்களில் வாழ்கின்றனர். தாத்தா சிவனை நம்பி வாழ்கிறார். பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் எல்லாம் கட்டாயம் பிரிந்தே தீருவார்கள். அது உலக நியதி. அதை மாற்றச் சிவனால் மட்டும் தான் முடியும். இதை நான் உணர்ந்து விட்டேன். அதனால்தான் பொய்யான உறவையும், பொய்யான வாழ்க்கையையும் வெறுக்கிறேன்’’ என்றான் நடராசா.

**என்பே உருகநின் அருள்அளித்துன் இணைமலர் அடி காட்டி**

**முன்பே என்னை ஆண்டுகொண்ட முனிவ முனிவர் முழுமுதலே**

**இன்பே அருளி எனையுருக்கி உயிருண் கின்ற எம்மானே நண்பே**

**யருளாய் என்னுயிர் நாதா நின்னருள் நாணாமே. 03**

‘‘வாகீசா, உன்னைப் போலத்தான் உனது தந்தையும் வாழ்கிறார். அவர் தனது மனைவியையோ அல்லது மனைவியின் உறவுகளையோ மதிப்பதில்லை. அதைப் பார்த்த நீயும் வாழக் கற்றுக் கொண்டாய். மனைவி சக்தியின் வடிவமாகும். சிவம் இல்லாமல் சக்தி இல்லை, சக்தி இல்லாமல் சிவம் என்கிறது சைவசமயம். அதனால்தான் சிவன் அர்த்தநாரீசுவரராக இருக்கிறார். திருமணம் செய்யாமல் பிரமச்சாரியாக இருக்கிறது வேறு. திருமணம் செய்தபின் பிரிந்திருப்பது வேறு. நீ தான் நாமகளுக்குப் பின்னால் நாய் மாதிரி அலைந்து திரிந்து திருமணம் செய்தாய். திருமணம் செய்தால் கணவன் மனைவிக்குரியவனாகியும், மனைவி கணவனுக்கு உரியவளுமாக மாற வேண்டும். நீ இன்னும் அவளுக்குரியவனாக இல்லை. இது குடும்ப உறவுக்கு வேறுபட்ட நிலை. எப்படி அவளைப் பிரிந்திருக்கிறாய்…? பிரிந்திருக்க மாட்டோம் என்று அக்கினி முன் சத்தியம் செய்து தானே திருமணம் செய்தாய். மாணிக்கவாசக சுவாமிகள்; ‘‘இறைவா, இன்னும் உனக்குரியவனாக இல்லை. ஆயினும் உன்னைப் பிரிந்திருக்க என்னால் இயலாது. இதற்கு காரணம் தெரியவில்லை. கருணையோடு எழுந்தருளிய பெரிய பொருள் நீ. என்னைவிட்டுப் பிரியமாட்டேன் என்று

கூறியது பொய்யா…?" என்று கேட்கிறார். இது குடும்ப வாழ்க்கைக்கும் பொருந்தும். சைவசமயம் குடும்பத்தைக் கோவிலாகவும், புனிதமானதாகவும், தெய்வீகமானதாகவும் கொள்கிறது. அதற்காகத் தான் திருமணத்தைப் புனிதச் சடங்காக்கிய பெரியவர்கள் தெய்வங்களைச் சாட்சிக்கு வைத்துத் திருமணத்தை முடித்து வைக்கிறார்கள். உடல் எப்போதும் புனிதத்தன்மை உள்ளதாக இருக்கும். உள்ளமும் அப்படித்தான். அதனால் தான் சிவன் அங்கு கோவில் கொள்கிறார். ஒருவன் இறந்தால் அவனது உடலைச் சிவமாகக் கருதியே சடங்குகள் செய்யப்படுகின்றன. உயிர் சிவத்தை அடைகிறது. அல்லது சிவனது கட்டளைப்படி இன்னொரு உடல் எடுக்கிறது. ஒருவனது உடல், பொருள், ஆவி அனைத்தும் சிவமயமானது. அதன் சிவசக்திகளான ஆணும் பெண்ணும் பிரிந்து வாழக் கூடாது'' என்றான் நடராசா.

**பத்தில னேனும் பணிந்தில னேனும்உன் உயர்ந்தபைங் கழல்**

**காணப் பித்தில னேனும் பிதற்றில் னேனும் பிறப்பறுப்பாய**

**எம்பெருமானே முத்தனை யானே மணியனை யானே முதல்வ**

**னேமுறை யோஎன்று எத்தனை யானும் யான்தொடர்ந் துன்னை**

**இனிப்பிரிந் தாற்றேனே. 04**

''வாகீசா, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; ''என்னிடத்தில் பக்தி இல்லை, பணிவு இல்லை, உன்னைப் போற்றுகின்ற பாங்கும் இல்லை. ஆயினும் பிறவியை ஒழிப்பவனே, மேலான பொருளே, அனைத்திற்கும் மூலமே, உன்னை ஒரு கணமேனும் பிரிந்திருக்க என்னால் முடியாது'' என்று சொல்வது உலக நடைமுறை கருதியே. மாணிக்கவாசக சுவாமிகள் சிவனைத் தலைவனாகவும், உயிரைத் தலைவியாகவும் கொண்டு தான் திருவாசகத்தில் பல பாடல்களைப் பாடியுள்ளார். அதற்கமைய இறைவனான தலைவியும், இறைவியாகிய உயிரும் ஒரு கணமும் பிரிந்திருக்கக்கூடாது என்பது, சைவசித்தாந்த தத்துவம். அதை குடும்பத்தலைவனான கணவனை இறைவனாகவும், உயிரான தலைவியை குடும்பத் தலைவிக்கும் ஒப்பிடுவர். இது முழுமையான வாழ்வின் தத்துவம் என்பதை உணர்பவர்களால் தான் இறைவனையும் உயிரான ஆன்மாவையும் புரிந்து கொள்ள முடியும். அதைப் புரிந்தால் தான் வாழ்வு சிறக்கும். ஒரு சைவசமயத்தவன் மனைவியோடு கூடித்தான் தான தர்மங்களைச் செய்ய வேண்டும். சன்னியாசம் செல்லும்போதும் மனைவியையும் அழைத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை நிறைவு பெறும்'' என்றான் நடராசா.

**காணும தொழிந்தேன் நின்திருப் பாதம் கண்டு கண் களிகூரப்**

**பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன் பின்னைஎம்**

**பெருமானே தானுவே அழிந்தேன் நின்னினைந் துருகுந்**

**தன்மைஎன் புன்மைகளால் காணும தொழிந்தேன் நீயினி வரினுங்**

**காணவும் நாணுவனே. 05**

''வாகீசா, தரிசிப்பது, திருவடியில் அன்போடு பணிவிடை பண்ணுவது, நினைத்து உருகுவது ஆகிய சிறப்புக்களைக் கைநழுவ விட்டுவிட்டேன். நிலைபேறுடையவனே, இனி நீ வலிய வந்தாலும் நிலைபேறு அற்ற நான் உன்னைக் காண நாணம் கொள்வேன்'' என்று கூறுவது கடவுள் வணக்கத்திற்கும் பொருந்தும். காதல் மிகுந்த குடும்ப வாழ்விற்கும் பொருந்தும். நினைத்துப் பார் புரியும்'' என்றான் நடராசா.

**பாற்றிரு நீற்றெம் பரமனைப் பரங்கரு ணையோடு எதிர்ந்து**

**தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்குஞ் சோதியை நீதி**

**யிலேன் போற்றியென் அமுதே என நினைந் தேத்திப்**

**புகழ்ந்தழைத் தலறியென் னுள்ளே ஆற்றுவனாக உடையவ**

**னேஎனை ஆவஎன் றருளாயே. 06**

''வாகீசா, வெண்ணீறு அணிந்த பரமன், பெருங்கருணை உள்ளவன். அதனால்தான் பக்தர்களின் முன்தோன்றி அருள்வழியைக் காட்டுகின்ற சோதி வடிவானவன். அவனைக் கண்டதும் ஒழுக்கமில்லாத நான் அவனை அமுதேயென்று போற்றி, நினைந்து, துதித்து, புகழ்ந்து, அழைத்து அலறி உள்ளத்தினுள்ளே நினைவு பெறுதல் வேண்டும். அதற்கு அவன் அந்தோ பாவம் என்று இரக்கப்படல் வேண்டும்'' என்கிறார். இது சிவனது மிகமிக எளிமையான தன்மையைக் காட்டுகிறது. படுபாதகமான செயல்களைச் செய்தவனையும், மன்னித்து முத்தியளித்தவன் சிவன். திருவிளையாடற் புராணத்தை வாசித்துப் பார். அதில் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது யாவும் உண்டு. பெருங்கருணை படைத்த அவன் யாவற்றையும் மன்னிப்பான் பக்தர்களை ஏற்றுக்கொள்வான். ஒரு சிவபக்தன் சிவனையும், ஏனைய உயிர்களையும், சிவனடியார்களாகவும், சிவனாகவும் கருதி வாழுதல் வேண்டும். இது மனிதர்களை

மட்டுமல்ல, ஏனைய உயிர்களையும் மதித்துப் போற்ற வேண்டும் என்ற தத்துவத்தை விளக்குகிறது. தனது தாயை மதிப்பவன் தனது மனைவியையும் மதிப்பான். தந்தையைப் பிள்ளைகளை மதிப்பவன் ஏனைய உயிர்களையும் மதிக்க வேண்டும். அப்படி மதிக்காதவன் சிவனை வணங்குவதால் நற்பலனைப் பெறமாட்டான். ஏழை அழுத கண்ணீரல்ல ஓர் உயிர் அழும் கண்ணீரும். கூரிய வாளை ஒக்கும். உனது தந்தை உனது தாயை மதியாமையால் உங்கள் குடும்பம் தினமும் துன்பப்படுவதை நீ தினமும் காண்கிறாய். அப்படியிருந்தும் நீ மனம் மாறவில்லை. ஒருவன் தனது மனைவிக்குச் செய்யும் துன்பங்கள் உமாதேவியாரைச் சென்றடையும் என்றும், ஏனைய உயிர்களுக்குச் செய்யும் துன்பம் சிவனைச் சென்றடையும் என்றும் புராணங்கள் கூறுகின்றன. சிக்கல்கள், பிரச்சினைகள் சிவனுக்கும், அம்மைக்கும் வந்து பிரிந்திருப்பின் அவர்கள் ஒன்று சேர்ந்தது திருவிளையாடல். அதன்மூலம் குடும்பத்தின் தத்துவங்கள் விளக்கப்படுகின்றன. அவை வெறும் கதைகள் என்று நினைக்காது அதன் தத்துவத்தைப் புரிந்து கொள்பவன் தான் இன்பமாக வாழ்கிறான்'' என்றான் நடராசா.

*திருச்சிற்றம்பலம்.*